மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அன்றே இல்லாவிட்டாலும், என்றோ ஒருநாள் கடைப்பிடிக்கும் என்பதற்கு அடையாளம்தான் இது.

Public Works Corporation

* 188 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under examination of the Government to set up a Public Works Corporation for the State; and

(b) if so, the details htereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) & (இ) ஆம். சென்னையில் உள்ள அரசினர் பொறியியற் பணிப் பட்டறைகள், மற்றும் பாரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தின் கீழ் ஆளியாறு நகரில் செயல்பெற்று வரும் பொறியியற் பணிப் பட்டறை, இவை திறம்படவும், வணிக முறையிலும் இயங்குவதன் நிமித்தம் "தமிழ் நாடு பொதுப்பணி பொறியியற் கூட்டு நிறுவனம்" என்ற பெயரில் ஒரு அமைப்பினை நிறுவ அரசு உத்தரவிட்டுள்ளது.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether other works will be included in this Public Works Corporation, apaart from the works mentioned by the Minister ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது பொதுப்பணித்துறை நடத்துகின்ற நிறுவனமாகும். தனியார் வேலை கொடுத்தாலும், மற்றத் துறைகள் கொடுப்பார்களானாலும் இங்கே அந்த வேலைகளைச் செய்து கொடுக்க முடியும்.